இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை 2008/2009
மட்டம் - 04
**LWU 2311** – ஒப்பந்தச் சட்டமும் முகவராண்மையும்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 21.03.2009 நேரம்: மு.ப 09.30 – பி.ப 12.30

பகுதி 1 இல் இருந்து ஒரு வினாவிற்கும் பகுதி 11 இல் இருந்து நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

## பகுதி 1 – முகவராண்மை

இப் பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.

1 (அ) முகவராண்மை சட்டத்துடன் தொடர்புடைய உண்மையான அதிகாரம்(Actual authority) என்பதன் பொருளை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி விளக்குக.

(ஆ) உறுதிப்படுத்தப்படுவதன் மூலமான(Ratification) முகவராண்மையினது விளைவாக வரும் "பின்வருகின்ற அதிகாரம்"(Subsequent authority) எனும் எண்ணக்கருவின் மூலம் கருதப்படுவது என்ன?

2 (அ) சமன் தமது 60 பர்ச்சஸ்(perchers) நிலப்பரப்பில் அமைந்த வீட்டினை விற்பனை செய்வதற்கு ரணிலுக்கு அங்கீகாரம் அளித்ததுடன் மூன்று மாதங்களுக்குள்ளாக தம் எதிர்கால கொள்வனவாளனை கண்டு பிடித்தால் 3% தரகுப்பணம் தருவதாகவும் உடன் பட்டார். ரணில் மூன்று மாத காலப்பகுதிக்குள் குறித்த சொத்தினை வாங்குவதற்கு விரும்புகின்ற அஜித் என்பவரை சமனுக்கு அறிமுகம் செய்தார். குறித்த சந்தர்ப்பத்தில் அஜித் சமனுக்கு ஓர் கொடைமுனைவினை செய்தாலும் குறித்த நிலம் 50 பர்ச்சஸ் அளவுக்கெண்டது என்பதனை கண்டுபிடித்ததும் தமது கொடைமுனைவை மீளப்பெற்றுக் கொண்டான். பின்னர் சமன் தம்மால் தேடிக்கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு கொள்வனவாளரான லக்ஷ்மனுக்கு சொத்தினை விற்பனை செய்தார். சமனிடம் இருந்து ரணில் தமது தரகுப்பணத்தினை பெறுவதற்கு விரும்புகின்றான்.

ரணிலுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) பர்ணான்டோ தமது தோட்டத்தினை விற்பனைசெய்ய ஓர் கொள்வனவாளனை தேடுவதற்கு ஜயவீரவுக்கு அறிவுருத்தியதுடன் விற்பனை விலையில் 3% த்தினை தரகுப்பணமாக தருவதற்கு உடன்பட்டார். ஜயவீர சிறிசேன என்பவரை பர்ணான்டோவிற்கு எதிர்கால கொள்வனவாளராக அறிமுகம்

செய்தான். பின்னதாக குறித்த பரிமாற்றலை வலுவுக்குக் கொண்டுவந்தமைக்காக சிறிசேனவிடமிருந்து தரகுத்தொகை ஒன்று ஜயவீரவுக்கு செலுத்தப்பட்டமையை பர்ணான்டோ அறிகின்றார்.

பர்ணான்டோவிற்கு ஆலோசனை வழங்குக.

3. வெளிப்படுத்தப்பட்ட மற்றும் வெளிப்படுத்தப்படாத முதல்வர்கள் என்ற எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாட்டினை வேறுபடுத்திக் காட்டுவதனூடு மூன்றாம் திறத்தவருக்கு எதிரான முதல்வரின் உரிமைகளை தருக.

## பகுதி 11 – ஒப்பந்தச்சட்டம்

**இப்பகுதியில் இருந்து <u>நான்கு</u> வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

4. ரஞ்சித்தமது மோட்டார் காரினை விற்பனை செய்வதற்கு தீர்மானித்து தமது வீட்டின், வெளிப்புறமாக காரினை நிறுத்திவைத்ததுடன் பின்வரும் வகையில் அமைந்த ஓர் அறிவித்தலை காரின் முன்பக்கக் கண்ணாடியில் ஒட்டினான். அறிவித்தல்: 'விற்பனைக்காக - நல்ல நிலையில் உள்ளது - ஒரு சொந்தக்கார் - 750,000 ரூபாய் அல்லது அதற்கண்மைய கொடைமுனைவு; இல 215, எஸ்டப்பர்ட் வீதிக்கு செல்லுதல் அல்லது 5234269 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு மாத்திரம்.'

திங்கட்கிழமை காலை 9 மணியளவில் திஸ்ஸ காரினைப் பார்த்தான், ஆனால் தொழிலுக்குச் செல்ல தாமதமாகியதால் அங்கு தரிக்க முடியாமல் போனது. அவன் ரஞ்சித்திற்கு 700,000 ரூபாவிக்கு ஓர் கொடை முனைவினை தொலைபேசி மூலம் செய்தான் என்பதுடன் ரஞ்சித் அதனைப்பற்றி ஆலோசிப்பதாகக் கூறினான்.

சேன என்பவன் ரஞ்சித்தின் வீட்டிற்கு திங்கட்கிழமை காலை 11 மணிக்கு சென்றான், ஆனால் ரஞ்சித்தின் மகள் ரேகா மாத்திரமே அங்கு இருந்தாள். அதன் காரணமாக பின்வருமாறு எழுதப்பட்ட ஓர் குறிப்பினை அவன் விட்டுச்சென்றான். 'திங்கள் 11 மணி 05 நிமிடம், தயவுசெய்து மோட்டார் காரினை எனக்காக வைத்திருக்கவும் - 750,000 ரூபாய்க்கான காசோலை இதோ, சேன'. ரேகா அக் குறிப்பினை ரஞ்சித்தின் அலுவலக அறையின் மேசையில் வைத்தாள்.

திங்கட்கிழமை மாலை, திஸ்ஸவின் கொடைமுனைவை ஏற்பதற்கு ரஞ்சித் தீர்மானிக்கின்றான் என்பதுடன் "நான் உமது கோரிக்கைக்கமைய விற்பனை செய்ய இணக்கம் தெரிவிக்கின்றேன். குறைக்கப்பட்ட விலையினைக் கருத்திற் கொண்டு கொடுப்பனவை உம்மால் பணமாக செலுத்த முடியுமா?" என்ற வகையில் ஓர் கடிதத்தினை எழுதி மாலை 2.30 மணியளவில் திஸ்ஸவின் அலுவலக முகவரிக்கு அனுப்பினான். திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் ரஞ்சித் சேனவின் ஏற்புக்கடிதத்தினை வாசித்ததுடன் உடனடியாக திஸ்ஸவின் அலுவலக இலக்கதிட்கு தொலைபேசி அழைப்பொன்றினை விடுத்து பதிவு செய்யப்பட்ட பதில் அளிக்கும் சேவையில் "நீர் பெறப்போகும் கடிதத்தினை சட்டைசெய்யத் தேவையில்லை – பாரிமாற்றல் முற்றுப்பெற்றது, ரஞ்சித்" என ஓர் தகவலை பதிவுசெய்தான். திஸ்ஸ அலுவலக வேலையாக வெளியே சென்றிருந்ததுடன் புதன்கிழமை மாலை மாத்திரமே அதனை செவிமடுத்தான்.

திங்கட்கிழமை 2மணி 15 நிமிடம் அளவில் அறிவித்தலை பார்த்த சரோஜினி ஏற்புக்கடிதம் ஒன்றினையும் 750,000 ரூபாய் காசோலையையும் அஞ்சலிட்டாள். அது 3 மணியளவில் சேகரிக்கப்படவேண்டிய அஞ்சலாகும். துரதிஷ்டவசமாக அவள்

பிழையாக முகவரியிட்டமையால் அக் கடிதம் வெள்ளிக்கிழமை மாத்தரமே வந்தடைந்தது.

தத்தமது சட்டநிலைப்பாட்டைப்பற்றி ஒவ்வொரு திறத்தவருக்கும் ஆலோசனை வழங்குக.

5. நிரஞ்சன் சித்திரங்களையும் பண்டையகாலப் பொருட்களையும் வாங்கி விற்கின்றவனாவான். விஜேசிங்க எனும் சிறந்த சித்திரக் கலைஞரின் ஓவியத்தினை விற்பனைக்கென சேனக எனும் ஓவிய வியாபாரி வைத்திருப்பதனை அவன் காணுகின்றான். தனக்கும் சேனகவுக்குமான முன்னைய ஒப்பந்தத்தின் மீதான கடன்தொகையொன்றை இன்னும் நிரஞ்சன் செலுத்தாதிருப்பதனால் சேனக தனக்கு நிச்சயமாக ஒரு போதும் ஓவியத்தினை விற்பனை செய்ய மாட்டான் என்பதனை நிரஞ்சன் அறிந்திருந்தான். எனவே நிரஞ்சன் சேனகவிற்கு தொலைபேசியழைப்பொன்றினை விடுத்து பின்வருமாறு கூறினான்: "நான் தேசாபிமானி குறுப்பு பேசுகிறேன், நான் ரோயல் ப்ளாசா உணவு விடுதியில் தங்கியுள்ளேன். நீர் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய விஜயசிங்கவின் ஓவியத்தினை கொள்வனவு செய்ய விரும்புகின்றேன் மேலும் விலைகள் இணக்கத்திட்கு வரக்கூடியதாக இருப்பின் உமது வீட்டிற்கு நாளை நான் வருவேன்". ரோயல் ப்ளாசா உணவு வடுதியின் முகாமையாளரிடம் தேசாபிமானி குறுப்புவின் பெயரானது தங்குகின்ற விருந்தினரின் பட்டியலில் இருக்கின்றதா என்பதனை பரீட்சித்து பின்னர் ஓர் கௌரவமான கொள்வனவாளனை தாம் கவர்ந்துள்ளமையையிட்டு சேனக மகிழ்ந்தான். உண்மையில் தேசாபிமானி குருப்புவின் பெயரில் ரோயல் ப்ளாசா உணவு விடுதியில் நிரஞ்சன் குறுப்புவிடம் இருந்து திருடப்பட்ட காசோலையுடன் தங்கியிருந்தான்.

அடுத்தநாள் நிரஞ்சன் நன்கு மாறுவேடமணிந்து சேனகவின் இடத்திட்கு சென்றான். ஓவியத்தின் விலை இணக்கப்பாட்டிற்கு வந்ததும் சேனக நிரஞ்சனிடம் இருந்து காசோலையைப் பெற்றதுடன் அவனுக்கு விஜேயசிங்கவின் ஓவியத்தினை எடுத்துச்செல்ல அனுமதித்தான். நிரஞ்சன் குறித்த ஓவியத்தினை தமது கடையில் பார்வைக்கு வைத்ததுடன் உடனடியாக அதனை ஜெயந்த எனும் தனிப்பட்ட சேகரிப்போனுக்கு பணப்பெறுமதிக்கு விற்பனை செய்தான். சேனக தற்போது காசோலை மறுக்கப்பட்டமையையும் மற்றும் ஜெயந்த தற்போது விஜேசிங்கவின் ஓவியத்தின் உடமையைக் கொண்டிருப்பதனையும் கண்டு பிடிக்கின்றான்.

சேனகவிற்கு அலோசனை வழங்குக.

ஜெயந்தவிற்கு விற்பனை செய்ய முதல் காசோலை நிராகரிக்கப்பட்டிருப்பதனை சேனக கண்டுபிடித்தும் மற்றும் அதனை பொலிசிற்கு அறிவித்தும் இருந்தால் உமது விடை வேறுபடுமா?

6. (அ) மௌனம் பிறழ்பகர்வினை ஏற்படுத்தக்கூடுமா?

(ஆ) (i) X இனது வியாபாரத்தினை Y இற்கு விற்பனை செய்யும் பேச்சு வார்த்தையில், X ஒரு வருடத்தில் தமது இலாபம் மூன்று மில்லியன் ரூபாவாக இருந்ததெனக் கூறி மற்றும் அதனை உறுதிப்படுத்த அதன் ஆவணங்களை Y இற்கு சமர்ப்பித்தான். Y குறித்த ஆவணங்களைப் பரீட்சிக்காது வியாபரத்தினை கொள்வனவு செய்தான். உண்மையில் அவ் ஆவணங்களை அவன் பரீட்சித்திருந்தால் X இன் கூற்று பிழையானது என்பதனை அவன் கண்டுபிடித்திருப்பான்.

Y இற்கு ஆலோசனை வழங்குக.

(ii) பெப்ரவரிமாதம் போக்குவரத்து வர்த்தகத்தின் விற்பனை பேச்சுவார்த்தையில் A இடம் B, ஒரு மாதத்திற்கு தம் வருமானம் 100,000 ரூபாய் எனக் கூறினான். யூலை மாதத்தில், ஒப்பந்தம் கைச்சாத்திட்டப்பட்ட பின்னர், Bஇனது சுகவீனம் காரணமாக ஒரு மாதத்தின் வருமானம் 20,000 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது. வருமானத்தின் வீழ்ச்சியினை வெளிப்படுத்தி தமது கூற்றினை B திருத்தவில்லை.

சட்ட நிலைப்பாட்டினை ஆராய்க.

7. பூரணத்துவமற்ற நிறைவேற்றத்துடன்(imperfect performance) தொடர்புபட்ட பிரச்சனைகளின் கடுந்தன்மையை குறைப்பதற்காக நீதிமன்றங்களினால் உருவாக்கப்பட்டுவருகின்ற விதிகளை நுணுக்கமாக ஆராய்க.

8. கொழும்பில் நடைபெறவிருக்கும் டீர்லாண்ட் மற்றும் ருரிடானியா என்பவற்றுக்கிடையேயான சர்வதேச மட்டைப்பந்து போட்டியினை கண்டுகளிப்பதற்கு சிறிபுர கிரிக்கட் கழகத்தின் 50 உறுப்பினர்களை அழைத்துச்செல்ல பெராமவுண்ட பஸ்கம்பனியிடமிருந்து பஸ் வண்டியொன்றினை அக்கழகத்தின் செயலாளர் என்றவகையில் ஜோன் வாடகைக்கு எடுக்கின்றான். ஒப்பந்த வாசகமானது பின்வருமாறு அமைகின்றது. "மூன்று வேலை நாட்களுக்கு முன்னதாக பஸ்கம்பனிக்கு அறிவித்தல் கொடுத்தால்ஒழிய ஒப்பந்தம் இல்லாதொழிக்கப்பட்டு வாடகை முழுமையாக அறவிடப்படும்".

பஸ் கம்பனியானது 9000/= ரூபாவினை கட்டணமாக அறவிடுகின்றது மற்றும் ஜோன் 5000/= ரூபாவினை முற்பணமாகச் செலுத்தினான். தமது எல்லா பஸ் வண்டிகளதும் பாதையில் பயணிக்கும் தராதரத்தினை பஸ் கம்பனியானது உறுதிப்படுத்துவதால் பயணத்திற்கு முன்னைய நாள் குறித்த பஸ் வண்டியானது ஒழுங்கான முறையில் பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தப்பட்டது. எப்படியிருப்பினும், குறித்த பயணத்திற்கு முன்னதான காலை வேளையில் குறித்த மட்டைப்பந்து மைதானத்தில் அரசியல் ஆர்ப்பாட்டக்காரர்கள் குழிகளைத் தோண்டியிருந்தபடியினால் மட்டைப்பந்து போட்டி இடம்பெறாது என அறிவிக்கப்பட்டது. உடனடியாக ஜோன் ஒப்பந்தமானது நிலைகுலைந்ததாக கூறியதுடன் முற்பணமாக தாம் செலுத்திய 5000 ரூபாயினை மீளக் கோருகின்றான்.

திறந்தவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

9. (அ) "பொதுவாகவோ அல்லது குறித்த சம்பவத்திலோ இறப்பினை எதிர்பார்த்துச் செய்யப்படும் சாவேதுக்கொடை ஓர் விசேடமான கொடையாகும் என்பதுடன் இது எதிர்பாத்த இறப்பு நிகழ்ந்தால் மாத்திரமே வலுவுடையதாகும்."

சாவேதுக்கொடையின் உருவாக்கம் மற்றும் தீர்மானிப்பு என்பவற்றினை தொடர்புறுத்தி ஆராய்க.

(ஆ) ஒரு மாத காலப் பகுதியில் கித்சிரி மற்றும் விமலா திருமணம் செய்வதற்கு உடன்படுகின்றனர். விமலாவின் தகப்பனான சில்வா தமது வீடுகளில் ஒன்றிணைக் கித்சிறிக்கு பரிசாகக் கைமாற்றினார். விமலா ஓர் எழுது

கருவி மற்றும் கைக் கடிகாரம் என்பவற்றைப் பரிசாகக் கித்சிறிக்கு கொடுத்தாள். அதன் தொடர்ச்சியாக கித்சிறி விமலாவினை திருமணம் செய்ய மறுத்ததுடன் சில்வாவினைத் தாக்கினான். சில்வா வீட்டினை மீளப் பெற விரும்புகின்றார் என்பதுடன் விமலா எழுது கருவியையும் கைக் கடிகாரத்தினையும் மீளப்பெற விரும்புகின்றாள்.

சில்வாவிற்கும் விமலாவிற்கும் ஆலோசனை வழங்குக.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப்பற்றி குறிப்பு வரைக.

(அ) தகாத செல்வாக்கு(Undue influence)
(ஆ) ஒப்பந்தத்தின் அடிப்படை முறிவு(Fundamental breach of contract)
(இ) திறத்தவரின் ஒப்பந்தத் தொடர்புக் கோட்பாடு(Doctrine of Privity of Contract)
(ஈ) விடுவிப்பு அல்லது தள்ளுபடி(Release or waiver)
(உ) இழப்பீட்டினை அளவிடல் (Measure of damages)

பதிப்புரிமையுடையது